# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி

## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

முக்கிய விடயங்கள்:

தயாரிப்புத் துறைக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 2020 நவெம்பரில் விரிவடைந்த வேளையில், பணிகள் துறைக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் மேல்நோக்கி திருப்பமடைந்த போதிலும் இன்னும் குறிப்பிடத்தக்களவு மட்டத்திற்கு கீழாகவே காணப்படுகிறது.


**தயாரிப்பு கொ.மு.சுட்டெண்ணானது 2020 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 17.3 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்புடன் 2020 நவெம்பரில் 57.6 இற்கு உயர்வடைந்தது.** புதிய கட்டளைகளில் குறிப்பாக புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் அத்துடன் உணவு மற்றும் குடிபானத் துறைகளின் தயாரிப்பில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு கணிசமான மேம்படுதலுக்கு பிரதானமாக பங்களித்துள்ளது. உற்பத்தித் துணைச் சுட்டெண்ணில், பிரதானமாக புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் அத்துடன் உலோகமல்லாத கனிம உற்பத்திகள் துறைகளின் தயாரித்தலின் விளைவான அதிகரிப்பானது அனைத்துத் துறைகள் முழுவதும் நிரம்பலர்களின் விநியோக நேரத்தின் வீழ்ச்சியடைதலுடன் ஒன்றிணைந்து தயாரிப்பு கொ.மு.சுட்டெண்ணின் ஒட்டுமொத்த அதிகரிப்பிற்குப் பங்களித்தது.

**தயாரிப்பு கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**57.6**

2020 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 17.3 சுட்டெண் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பு

நியாயமான/திருப்திகரமான கேள்வி காணப்பட்ட போதிலும், சுகாதாரம் தொடர்புபட்ட கரிசனைகளின் காரணமாக குறைவான ஊழியர்கள் கிடைக்கப்பெறும் தன்மையினால் விரும்பப்பட்ட இயலளவில் அவர்கள் உற்பத்தியினை மேற்கொள்ள முடியாதிருந்தனர் என உணவு மற்றும் குடிபானம் அத்துடன் புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் துறைகளிலுள்ள சில பதிலிறுப்பாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | ஒத் | நவெ | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **40.3** | **57.6** | **+** | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| **கொ.மு.சு. துணைச்சுட்டெண்கள்** | | | | |
| புதிய கட்டளைகள் | 43.3 | 61.8 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| உற்பத்தி | 30.3 | 52.2 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| தொழில்நிலை | 25.8 | 48.9 | + | சுருக்கமடைகின்றது மெதுவாக வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 37.1 | 47.2 | + | சுருக்கமடைகின்றது மெதுவாக வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 72.5 | 77.0 | + | நீட்சியடைகின்றது உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியில் அவதானிக்கப்பட்ட உயர்வான அதிகரிப்பிற்கு மத்தியில், சில திரண்ட இருப்புக்கள் கிடைக்கப்பெற்றமையினால் சிறிய மேல்நோக்கிய திருப்பமடைதலுடன் கொள்வனவுகளின் இருப்பு சுருக்கமடைந்து காணப்பட்டது. நிரம்பலர் விநியோக நேர துணைச் சுட்டெண்ணானது பிரதானமாக கொழும்புத் துறைமுகத்தில் இடம்பெறுகின்ற தாமதத்தின் காரணமாக உயர்வான வேகத்தில் நீட்சியடைந்தது. இங்கு பல பதிலிறுப்பாளர்கள், தமது கப்பற்பொருட்கள் கப்பல் நிறுவனங்கள் மூலம் ஒன்றில் மீள்வழிப்படுத்தப்பட்டன அல்லது ஏற்றுக்கொள்ளப்படுதற்கு மறுக்கப்பட்டன என குறிப்பிட்டிருந்தனர்.

நாட்டினுள் அதேபோன்று முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளில் பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்குத் திரும்புவதற்கான எதிர்பார்க்கையுடன் அடுத்த மூன்று மாதங்களுக்கான தயாரித்தல் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் பற்றிய துணைச் சுட்டெண் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.

### *உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சு 2020 ஒத்தோபரிலிருந்து 0.7 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்புடன் 2020 நவெம்பரில் 53.7 இனைக் கொண்ட பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தது.

ஐரோப்பிய வலயம், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் சீனா நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சு உயர்வான வீதத்தில் தொடர்ந்தும் விரிவடைந்த அதேவேளை இந்தியாவின் கொ.மு.சுட்டெண் மெதுவான வீதத்தில் விரிவடைந்தது. கொவிட்-19 இன் தொடர்ந்தும் ஏற்பட்ட பாதகமான தாக்கத்தின் மூலம் ரஷ்யாவின் தயாரிப்பு கொ.மு.சு மாதகாலப்பகுதியில் மேலும் சுருக்கமடைந்தது.

*மூலம்: மார்க்கிட்[1], 2020 திசெம்பர் 15இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**சுருக்க எல்லையினுள் காணப்பட்ட பணிகள் துறை கொ.மு.சுட்டெண், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 நவெம்பரில் 48.8 இற்கு அதிகரித்து 2020 நவெம்பரில் பணிகள் துறை பொருளாதார நடவடிக்கைகளில் மெதுவான வீழ்ச்சியொன்றினைப் பிரதிபலித்தது.** பணிகள் துறை நடவடிக்கைகளில் இச்சீர்குலைவிற்கு பணிகள் துறை கொ.மு.சுட்டெண்ணின் தொழில் நடவடிக்கைகள் மற்றும் தொழில்நிலை என்பவற்றில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிகள் துணையளித்தன.

புதிய வியாபாரங்கள் துணைச் சுட்டெண் குறிப்பாக போக்குவரத்து மற்றும் கல்வி துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளுடன் 2020 நவெம்பரில் அதிகரித்தது.

வியாபார நடவடிக்கைகள் துணைச் சுட்டெண்ணும் மாத காலப்பகுதியில் அதிகரித்து பணிகள் நடவடிக்கைகளின் சுருக்கத்தில் மிதமடைதலொன்றினை எடுத்துக்காட்டியது. நிதியியல் பணிகள் மற்றும் காப்புறுதித் துணைத் துறைகளின் வியாபார நடவடிக்கைகள் 2020 நவெம்பரில் அதிகரிப்பொன்றினைக் காண்பித்தன. எனினும், 2020 நவெம்பர் ஆரம்பப்பகுதியில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாம் அலையின் பரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட மேல் மாகாணத்தில் விதிக்கப்பட்ட ஊரடங்கு மற்றும் இனங்காணப்பட்ட பிரதேசங்களில் தனிமைப்படுத்தல் என்பன மூலம் மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து, தங்குமிடம், உணவு மற்றும் குடிபான துணைத் துறைகளில் வியாபார நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்தது. எதுஎவ்வாறிருப்பினும், ஆடைகள் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரண ஏற்றுமதிகளில் அதிகரிப்பின் காரணமாக தமது வியாபார நடவடிக்கைகளில் மேம்பாடொன்று அவதானிக்கப்பட்டதென கப்பல் சரக்கு அனுப்புகின்ற பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர்.

முடக்கல் பிரதேசங்களில் வதிகின்ற ஊழியர்கள் சமூகமளிக்காமையின் காரணமாக அவர்களது தொழில் நடவடிக்கைகளில் இடையூறுகள் மூலம் நிலுவையிலுள்ள பணிகள் 2020 நவெம்பரில் தொடர்ந்தும் அதிகரித்தன.

புதிய ஆட்சேர்ப்புகள் நிறுத்தப்பட்டமைக்கு மத்தியில் ஒப்பந்த ஊழியர்களின் பணி உடன்படிக்கைகள் நீடிக்கப்படாமையின் காரணமாக 2020 நவெம்பரில் தொழில்நிலை தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது.

| மாறி | ஒத் | நவெ | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **41.8** | **48.8** | + | **வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில்** |
| | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | | |
| புதிய வியாபாரங்கள் | 40.1 | 50.5 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு |
| வியாபார நடவடிக்கை | 35.7 | 43.0 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 58.7 | 58.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 39.3 | 39.0 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 35.2 | 53.0 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

எவ்வாறாயினும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாவது அலை மூலம் பாதிக்கப்பட்டிருந்த பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சி தொடர்பில் பணி வழங்குநர்கள் மிகவும் சாதகமான எண்ணப்பாங்கினைக் கொண்டிருந்தமையினால் எதிர்கால வியாபார நடவடிக்கைகள் மீதான எதிர்பார்க்கைகள் கணிசமாக அதிகரித்தன.

**பணிகள் கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 48.8**

2020 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 7.0 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## *உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு*

உலகளாவிய பணிகள் கொ.மு.சு 2020 ஒத்தோபரில் 52.9 இலிருந்து 2020 நவெம்பரில் 52.2 இற்கு வீழ்ச்சியடைந்து தொடர்ச்சியாக ஐந்தாவது மாதமாகவும் உலகளாவிய பணி நடவடிக்கைகளில் விரிவடைதலொன்றினை சமிக்ஞைப்படுத்துகின்றது.

ஐக்கிய அமெரிக்கா, சீனா, இந்தியா ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 நவெம்பரில் அவற்றின் பணிகள் துறைகள் விரிவடைந்ததை எடுத்துக்காட்டிய அதேவேளை, யப்பான் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் கொ.மு.சுட்டெண் சீர்குலைவொன்றினை எடுத்துக்காட்டியது.

*(மூலம்: மார்க்கிட்[1], திசெம்பர் 15, 2020 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.